முருகப்பெருமான் துணை

**மகான் கமலமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.01.2024**, செவ்வாய்கிழமை

1. தருமராஜனே அரங்கா வாழ்க
   தனிப்பெருங்கருணை வடிவான
   ஆறுமுக அரங்கமகா தேசிகனே
   அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சிலை திங்கள்
   குறைவிலா அறுநான்கு திகதி குசன்வாரம்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 24 ம் நாள், 09.01.2024, செவ்வாய்கிழமை)
   தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
   தேசிகனுக்கு கமலமுனிவர் யானும் உரைப்பேன்
3. உரைக்கவே பேதம் கருதா ஞானம்
   உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
   குறைவிலா சைவநெறி போற்றிட
   குருவரங்கன் காட்டும் மார்க்கம் வழி
4. மார்க்கம் வழி உலகமக்கள் தானும்
   மனமுவந்து சரணாகதி கொண்டு
   பார்த்துரைக்க உயர்த் தொண்டர்களாக
   படைகளாக ஞானவழித் தேறி
5. தேறியே தேசமெங்கிலும் பரவிட
   தெய்வ நெறி மகாசக்தியாக
   மாறியே உலகினை காத்தருளும்
   மக்களுக்கு தனிப்பாதுகாப்பாக உருவாகும்
6. ஆகவே இவ்வாறு மெய்ஞான
   ஆற்றல் வழி ஆறுமுகப் பெருமான்
   செகமெல்லாம் வெளிப்பட்டுமே
   சித்திகளை தந்தருள நேரும்

7. நேருமையான சமூகச் சூழலும்
நீதி தவறா நல்லத் தலைமை
வறுமை அறியா ஆளுமையாவும்
வளர்ச்சிதனை இந்தப் பேருலகம் காணும்
8. காணவே அரங்கர் படைகளாம்
கந்தப் பெருமானே உருவாக்கும்
ஞானப்படைகளாம் இவர்கள்
ஞானிகளாக கலியில் தேறியே
9. தேறியே எண்ணிலா கோடிகோடி
தேர்வுகளாகப் பெருகி உலகில்
மாறிடும் ஞான உலகமாகும்
மக்களுக்கு மரணம் மறுமை விலகி
10. விலகியே வேலவனை காணும்
வெற்றி முகம் ஆக மாற்றம்
காலமதில் கண்டுச்சிறந்து
கண்டுரைப்பேன் உலக மாற்றம்
11. மாற்றம்தனை அரங்கன் சபை
மகத்துவம்பட செய்து முடித்து
ஆற்றல்பட ஞான ஆட்சி தரும்
ஆறுமுகனார் தலைமை கண்டிடவே

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—